# கலைஞரும் நானும் 40

**“50 ஆண்டுகள் தி.மு.க.வின் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும், 5 முறை முதல்வராகவும் கடமையாற்றினாலும், பத்திரிகையாளராக கலைஞரின் உழைப்புத் திறன் ஈடு இணையற்றது. ஊடகத் தம்பிகள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் இது! நான் கற்றுக்கொண்டு செயல்படுத்திய பாடமும் அதுவே...” என கலைஞருடனான தனது நினைவுகளைப் பகிர்கிறார் மூத்த பத்திரிகையாளர் ‘தராசு’ ஷ்யாம்.**

■ ‘தராசு’ ஷ்யாம்,
மூத்த பத்திரிகையாளர்

“பத்திரிகையாளனாகப் பல தலைவர்களோடு பழக, காலம் எனக்கு வாய்ப்பு வழங்கியது. ஒப்பாரும் மிக்காரும் இல்லாத அத்தகைய தலைவர்களில் கலைஞருக்குத் தனி இடம் உண்டு. கலைஞரை நான் முதன்முதலில் காணக் கிடைத்தது பள்ளி இறுதிவரை பயின்ற சாத்தான்குளத்துக்கு (இன்றைய தூத்துக்குடி மாவட்டம்) அவர் வருகை தந்தபோதுதான்.

மின்னல் வேகத்தில் மாலைகளைப் பெற்றுக்கொண்டு எதுவும் பேசாமல் கிளம்பிவிட்டார். ஊரிலிருந்த ஒரு கொட்டகையில் கலைஞர் பேசப் போவதாகவும் அங்கு காத்திருக்கும்படியும் கூறினார்கள். அங்கு சென்ற பிறகுதான் தெரிந்தது, அப்படி ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடே செய்யப்பட வில்லை என்பது.

“இரண்டு, மூணு பசங்க சைக்கிள்ல போய் பிடிங்க. போகும்போது ‘முரசொலி’ பத்திரிகையைக் கையில எடுத்துக்கிட்டு உசத்திக் காட்டுங்க. காரை நிறுத்தச் சொல்லுவாரு!” அண்ணாச்சி ஒருவர் கொடுத்த ஐடியா வேலை செய்தது. இளைஞர்கள் சிலர் கைகளில் ‘முரசொலி’யை எடுத்து ஆட்டிக்கொண்டு வருவதைப் பார்த்த கலைஞர் வண்டியை நிறுத்திப் பேசினார். அவரது மூத்த பிள்ளை ‘முரசொலி’ அல்லவா?



## மாற்றங்களை வரவேற்ற தலைவர்!

### தலைவரின் தஞ்சைக் குறும்பு

கலைஞரை தி.மு.க. தலைவராகவோ, தமிழ்நாட்டு முதல்வராகவோ பார்ப்பதை விட, பத்திரிகையாள ராகவோ எழுத்தாளராகவோ, பார்ப்பதில் எப்போதும் எனக்குப் பேரானந்தம். பள்ளிப் பருவத்தில் அண்ணாந்து பார்த்த அருமைக் கலைஞரை அடுத்த 25 ஆண்டுகளில் பத்திரிகையாள னாக நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

1988-ஆம் ஆண்டு ஜூன் 3-ஆம் தேதி, அவரது பிறந்த நாள் அன்று சால்வை அணிவித்துவிட்டு வாழ்த்துக் கூறியபோது,

“என்னய்யா..என்ன நடக்குது!” எனக் கேட்டார். நான் ஜாக்கிரதையாக பதில் கூறுவதாக நினைத்துக்கொண்டு, “அண்ணே..உங்களுக்குத் தெரியாததா?” என்றேன். சட்டென்று அவரிடமிருந்து “தெரியாததால் தான்யா கேட்கிறேன்!” என தஞ்சை மண்ணுக்கே உரித்தான இயல்பான குறும்பு வந்து விழுந்தது.

### தட்டிக் கொடுத்த அனுமதி

1995-ஆம் ஆண்டு, மூத்த பத்திரிகையாளர் மறைந்த ரவீந்திரதாஸ் மகள் டாக்டர் அஜிதா திருமணம். கலைஞர் தலைமை தாங்கி நடத்தி வைத்தார். நான், வேறு ஓர் அவசரப் பணி காரணமாக பாதியில் செல்ல வேண்டிய நிலை. மேடையில் அவருடன் இருந்த நான், அவரிடம் சொல்லிக்கொண்டு அனுமதி பெற்றுப் போக எண்ணி அருகில் சென்றேன். வாஞ்சையுடன் முதுகில் தட்டிக்கொடுத்து அனுப்பினார்.

மிகவும் மூத்த தலைவர். ஆனாலும், அவருக்கு முன்பே புறப்படுவதைப் பொருட்படுத்த வில்லை. திருமண விழாவுக்கு வந்திருந்த கட்சிப் பிரமுகர்களும், மற்றவர்களும் சங்கடப்படக் கூடாது என்பதற்காக, அவர் காட்டிய நல்லெண்ண சைகையே அந்தத் தட்டல் என்பதைப் பின்னர் புரிந்துகொண்டேன்.

**பெரும்பாலும் நான் அவரைத் தனித்து சந்தித்தது எல்லாம் காலை நான்கரை அல்லது ஐந்து மணிக்குத்தான். அப்போதே எல்லா பத்திரிகைகளையும் படித்து முடித்துத் தயாராக இருப்பார்.**

### அதிகாலை நேர தயார்நிலை

கலைஞரிடமிருந்து இன்றைய இளையதலைமுறை கற்க வேண்டிய பாடம், அவரது கடின உழைப்பு. பெரும்பாலும் நான் அவரைத் தனித்து சந்தித்தது எல்லாம் காலை நான்கரை அல்லது ஐந்து மணிக்குத்தான். அப்போதே எல்லா பத்திரிகைகளையும் படித்து முடித்துத் தயாராக இருப்பார். நம்மிடம் கேட்பதற்குத் தோதான கேள்விகளையும் மனதில் தயார் செய்து வைத்திருப்பார்.

கலைஞரின் நினைவாற்றல் அபாரமானது. ஏதாவது மாற்றிச் சொல்லிவிட்டால், “அன்று அவ்வாறு சொன்னாயே?” என்று ஞாபகமாகக் கேட்டுவிடுவார். அதேபோல் ஏதாவது புதிய விஷயங்களை எழுதினால், “என்ன ஆதாரம்?” என்று தொலைபேசியிலேயே கேட்பார்.

### பிழை பொறுக்காத ஆசிரியர்

கலைஞர் தலைமையில் சென்னை யில் பொதுக்கூட்டம். பேசும்போது பிழையாக கவிஞர் பெயரை மாற்றிக் கூறிவிட்டேன். உடனே கலைஞர் குறுக்கிட்டுத் திருத்தி னார். முடிந்ததும், “பிழை யான தகவல் போய் சேர்ந்து விடக் கூடாது!” என்று மென்மையாக என்னையும் சமாதானப்படுத்தி னார்.

கலைஞரைத் தாக்கியும் எழுதி இருக்கிறேன். போற்றியும் எழுதி இருக்கிறேன். இரண்டையும் அவர் சமமாகப் பார்த்தார். ‘தாக்குதல், தனிப்பட்ட வகையில் தன் மீதானது அல்ல. நிர்வாகத்தின் குறைபாடுகளால் விளைந்தது’ என்பதை அவர் நன்கு புரிந்து வைத்திருந்தார்.

### நேரடி செய்திகள் தந்தவர்

நவோதயா பள்ளிகளை நிறுவ, 1986-இல் ஒன்றிய அரசு திட்டம் கொண்டு வந்தது. அவற்றில் இந்தி கற்பது கட்டாயம். தி.மு.க. அதை எதிர்த்தது. நவம்பர் 17-ஆம் தேதி டெல்லியில் அரசின் கல்விக் கொள்கைக்கு எதிராக, அரசியலமைப்பின் 17-வது பகுதியை எரித்துப் போராட்டம் நடத்தியது. கலைஞர் உட்பட 20,000 க்கு மேற்பட்ட தி.மு.க. தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். பரபரப்பாக ‘தராசு’ இதழில் எழுதி வந்தேன்.

இந்திய அரசியல் சட்டத்தைத் தீயிட்டுக் கொளுத்திய காரணத்தால் பேராசிரியர் அன்பழகன் உள்ளிட்ட 10 தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராக இருக்கத் தகுதி அற்றவர்கள் என்று அவை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டார்கள்.

அப்போது கலைஞர் மேலவை உறுப்பினர். சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தை விளக்கி, அவர் பேசியும் எழுதியும் வந்தார். பல செய்திகளை நேரடியாக அவரிடமிருந்தே கேட்டுத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

> எங்கள் பாட்டனின் ஊரான பட்டுக்கோட்டை அருகில் நாடியம் மற்றும் மருங்கப்பள்ளம் என்று இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. 2010 கால கட்டத்தில் அங்கு நான் வேளாண்மை பார்க்கச் சென்றுவிட்டேன்.
>
> அந்த ஊரில் தங்கித்தான் 1957-இல், ’புதையல்’ படத்துக்குக் கதை, வசனம் எழுதியிருக்கிறார் கலைஞர். அதை அறிந்து அவர் தங்கி இருந்த இடத்தைத் தேடிக் கண்டுபிடித்தேன். ஊரின் சிவன் கோவில் அருகே அவர் நடைப்பயிற்சி சென்றதைப் பற்றியும் ஒரு பெரியவர் நினைவு கூர்ந்தார்.

### மாற்றத்தின் நண்பர்

1989-ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன் அடுத்த முதல்வர் கலைஞர்தான் என்று கருத்துக் கணிப்புகளை வெளியிட்டு வந்தேன். **‘வாக்காளர் சர்வே’** என்பதே அன்றைய காலகட்டத்துக்குப் புதிய முயற்சி. எனவே கலைஞர் ஆர்வத்தோடு கருத்துக் கணிப்பு முறைகளையும், அதற்கான மாதிரி வினாத்தாளையும் கேட்டுத் தெரிந்து கொண்டார். புதிய மாறுதலை எதிர்க்கும் மனோபாவம் (RESISTANCE TO CHANGE) கலைஞருக்கு என்றும் கிடையாது.

மிக மூத்த அகவையில் கலைஞர் கணினி கற்றுக் கொண்டார். அகர முதல என்று தமிழில் டைப் செய்து அந்த எழுத்துகள் கணினித் திரையில் தோன்றியதை அவர் குழந்தையைப் போல் ரசித்தார் என்று சொல்வார்கள். அவர் தன்னைத் தானே ‘அப்டேட்’ செய்துகொண்டே வந்தார்.

முதல்வராக இருந்தால், கோப்புகளைப் பார்ப்பார், எழுதுவார். முதல்வராக இல்லாவிட்டால், நூல்களைப் படிப்பார், ‘முரசொலி’க்கு எழுதுவார். இதுதான் நான் கண்ட கலைஞர். அவர் மறைந்த போது எழுதினேன், “கலைஞர் எழுதுவதை நிறுத்திக்கொண்டார்” என்று. ஆனால், அவர் எழுதியவற்றை தமிழ் பத்திரிகையுலகம் என்றும் மறக்காது.

...பகிர்வார்கள்

## யார் முகத்தில் கரி?

வெளிநாடுகளில் இருந்து நிலக்கரியை இறக்குமதி செய்யும்போது, சந்தை மதிப்பைவிட பல மடங்கு விலை வைத்து, இறக்குமதி செய்து அதை இந்தியாவில் பல மடங்கு விலையில் விற்பனை செய்து கொழுத்த லாபத்தைப் பார்த்து வருகிறது, அதானி குழுமம். இதன் காரணமாக, மின் கட்டணம் உயர்ந்து, மக்கள் அவதியுறுகிறார்கள் என்று 2016-ஆம் ஆண்டே அந்தக் குழுமத்தின் மீது குற்றம்சாட்டப்பட்டது. அதுதொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் தோற்றுப் போய், அதானி குழுமத்தின் மீது எந்தத் தவறும் இல்லை என்று சொல்லப்பட்டது.

இந்நிலையில், இலண்டனிலிருந்து வெளிவரும் ‘ஃபினான்ஷியல் டைம்ஸ்’ எனும் நாளிதழ் கடந்த சில நாட்களுக்கு முன்பு அதானி குழுமம் குறித்து அதிர்ச்சி கரமான தகவலை வெளியிட்டுள்ளது.

அதாவது, அந்த நிறுவனம் இந்தோனேஷி யாவில் கிடைக்கும் நிலக்கரியை தைவான், துபாய், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் உள்ள பரவலாக அறியப்படாத சில இடைத்தரகு நிறுவனங்கள் மூலம் இறக்குமதி செய்துள்ளது. அதனால் இந்தோனேஷியாவில் 139 மில்லியன் டாலருக்கு வாங்கிய நிலக்கரியை, இந்தியாவுக்கு வரும்போது 215 மில்லியன் டாலராகக் காட்டியிருக்கிறது.

கேள்வி என்னவென்றால், நிலக்கரியை நேரடியாக வாங்காமல், இடைத்தரகர்கள் மூலமாக ஏன் வாங்க வேண்டும் என்பது தான். நிலக்கரி கைமாற்றப்பட்ட அந்தக் காலகட்டத்தில் அந்த இடைத்தரகு நிறுவனங்களும் அதிக அளவில் லாபம் பார்த்திருக்கின்றன. எனில், அவை அதானி குழுமத்தின் பினாமி நிறுவனங்களா என்று கேள்வி எழுந்துள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



### வீட்டுக்கு வந்த வாழ்த்து!

1958-ஆம் ஆண்டு ஜூலை 5 அன்று என் தந்தை மற்றும் சித்தப்பா ஆகியோரின் திருமணம் **‘இசைமுரசு’ நாகூர் ஹனிபா** அவர்களின் இசைக் கச்சேரியுடன் ஒருங்கிணைந்த மதுரை மாவட்டம், பெரியகுளத்தில் நடைபெற்றது. திருமணத்துக்கு வருகை தர முடியாத காரணத்தால் அதற்கடுத்த வாரம் தலைவர் கலைஞர் வருகை தந்து இருவருக்கும் வாழ்த்துத் தெரிவித்து, மதிய உணவையும் வீட்டிலேயே உட்கொண்டார். சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகியவற்றில் தீவிரமாக இயங்கி, தி.மு.க.விலும் தளராமல் பணியாற்றிக் கொண்டிருந்த என் தாத்தாக்கள் மளுக்கர் மேத்தர், சின்ன மளுக்கர் ஆகியோர் தலைவர் கலைஞரின் அருகில் அமர்ந்துள்ளனர். இன்றைக்கு பெரியகுளம் பகுதியில் அமைந்திருக்கும் ஆடுபாலத்துக்கும் அப்போது கலைஞர் தலைமையில் அடிக்கல் நாட்டப்பட்டதாக என் தந்தை கூறியுள்ளார். மிக இளம் வயதில் தலைவர் கலைஞரை இதில் பார்க்க முடியும்.



அப்துல் சித்திக்

**-எம்.அப்துல் சித்திக்,**
**புகைப்படக் கலைஞர், பெரியகுளம்**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ஆங்கிலம் அலுவல் மொழி

**1958-இல் நடைபெற்ற அகில இந்திய அலுவல் மொழி மாநாட்டில், ஆங்கிலத்தை ஒன்றிய அலுவல் மொழியாக்கிட வலியுறுத்திய பெரியார், வட இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்து சாதி அமைப்பைக் கடுமையாகக் கண்டித்தார். சென்னையில் நடைபெற்ற தனது கடைசிக் கூட்டத்தில் கூட சமத்துவத்தையும் சமூக நீதியையும் வலியுறுத்தினார் பெரியார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 270




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131